

இராணிப்பேட்டை மாவட்டம் விளாப்பாக்கத்தில் கைத்தறி மற்றும் துணிநூல்துறை அமைச்சர் மாவட்ட கழக செயலாளர் ஆர்.காந்தி, 27,158 மகளிர்களுக்கு ரூ.1000 கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தை தொடங்கி வைத்தார். உடன் மாவட்ட ஆட்சியர் ஜெ.யு.சந்திரகலா, மாவட்ட அவைத்தலைவர் ஏ.கே.சுந்தர மூர்த்தி, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஆற்காடு சட்டமன்ற உறுப்பினர் ஜெ.எல். ஈஸ்வரப்பன் மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ஜெயந்தி, ஒன்றிய குழு தலைவர்கள் எஸ்.அசோக், புவனேஸ்வரி நிர்மலாசவுந்தர், திமிரி ஒன்றிய குழு துணை தலைவர் ஜெ.ரமேஷ், நகராட்சி தலைவர்கள் தேவி,சுஜாதாவினோத் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### கேலோ இந்தியா திட்டத்தின் கீழ்

# தமிழ்நாட்டு விளையாட்டு வீரர்களுக்கு அளிக்கப்பட்ட பயிற்சி, நிதி உதவிகள் என்ன?

## மாநிலங்களவையில் டாக்டர் கனிமொழி என்.வி.என்.சோமு கேள்வி

புதுடெல்லி, டிச.15-

கேலோ இந்தியா திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டிலிருந்துதேர்வானவர்கள் எத்தனை பேர்? அவர்களுக்கு வழங்கபட்டும் பயிற்சிகள் மற்றும் நிதி உதவிகள் என்ன?கிராமப்புறங்களில் விளையாட்டை மேம்படுத்த எடுத்த நடவடிக்கைகள் என்ன? என்று மாநிலங்களவையில் தி.மு.க. எம்.பி., டாக்டர் கனிமொழி என்.வி.என். சோமு கேள்வி எழுப்பி இருந்தார்.



இதற்கு ஒன்றிய இளைஞர் விவகாரம் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா அளித்த பதில் வருமாறு:

கேலோ இந்தியா திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டிலிருந்து 202324 ம்ஆண்டில் 173 தடகளவீரர்களும், 2024 25 ல் 194 பேரும், 202526ல் 186 பேரும் தேர்வு செய்யப்பட்டார்கள். சென்னை, திருவள்ளூர், கோவை, கன்னியாகுமரி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் இருந்து அதிக அளவில் தேர்வாகியிருக்கிறார்கள்.

திறமையான விளையாட்டு வீர்களை அடையாளம் கண்டுகேலோ இந்தியா திட்டத்தின் கீழ் செயல்படும்ஏதேனும் ஒரு கேலோ இந்தியா மையம் மற்றும் விளையாட்டு அகாடமியில் அவர்கள் சேர்ந்துகொள்ள அறிவுறுத்தப்படுகிறார்கள். அப்படிச் சேரும் வீரர்களுக்கு பயிற்சி செலவு போட்டிகளுக்குத்தயாராவதுகல்விஅவரவர் சார்ந்த விளையாட்டு உபகரணங்கள் வாங்குவதற்கு என ஆண்டுக்கு 6.28 லட்சம் ரூபாய் நிதி உதவியும்அறிவியல் பூர்வமான விளையாட்டு திறன் மேம்பாட்டு பயிற்சியும் அளிக்கப்படுகிறது. கேலோ இந்தியா திட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டுள்ள அத்தனை விளையாட்டுகளோடு தொடர்புடைய வீரர்களுக்கும் இந்த நிதி உதவி அளிக்கப்படுகிறது.

நாடு முழுக்க உள்ள இளைஞர்களிடையேவிளையாட்டின் முக்கியத்துவத்தை உணர்த்திவிளையாட்டு உணர்வுகளை மேம்படுத்தி அவர்களை சாதனைக்குரியநபர்களாகமாற்றுவதும்கேலோ இந்தியா திட்டத்தின் ஓர் அம்சமாகும். இதுவரை பள்ளிகளுக்கானகேலோ இந்தியா விளையாட்டு ஒரு முறையும் இளைஞர்களுக்கான கேலோ இந்தியா விளையாட்டுப் போட்டிகள் ஆறு முறையும் நடந்துள்ளன. இந்தப்போட்டிகள் அனைத்தும் சர்வதேசத்தரத்தில்நடத்தப்பட்டவை என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தப்போட்டிகளில் நாடு முழுக்க இருந்து 34500 விளையாட்டு வீரர்கள் கலந்துகொண்டார்கள். அவர்களில்தகுதியான 2897 பேர் கேலோ இந்தியா தடகளவீரர்களாக தேர்வு செய்யப்பட்டனர். இப்படி தேர்வாகும்வீரர்களுக்குசர்வதேசத்தரத்தில் பயிற்சி அளிக்கப்படுவதை உறுதி செய்யும் வகையில்அதற்கென கூடுதல் அங்கீகாரம் பெற்ற கேலோ இந்தியா மையங்களில் இவர்களுக்கு விளையாட்டுப் பயிற்சிகள் அளிக்கப்படுகிறது.

இங்கே பயிற்சி பெறும் வீரர்கள் தேசியசர்வதேச அளவில் விளையாடும் பிற வீரர்களோடு விளையாட வைக்கப்படுகிறார்கள். இதன் மூலம் இந்த வீரர்கள் தங்கள் திறமையை நம்பிக் கையைஉயர்த்திக்கொள்ள முடிகிறது. இது எதிர்காலத்தில் நமது நாட்டுக்காக விளையாடும்போது கூடுதல் பலத்தை உற்சாகத்தை அளிக்கும்.

இதுதவிரஒன்றிய இளைஞர் விவகாரம் மற்றும் விளையாட்டு அமைச்சகம் தொலைதூர மற்றும் கிராமப்புறத்தில் உள்ள இளைஞர்களிடையே விளையாட்டு ஆர்வத்தை மேம்படுத்த பல்வேறு திட்டங்களைசெயல்படுத்திவருகிறது.

விளையாட்டு மேம்பாட்டுக்கான தேசிய அளவிலான திட்டம்விளையாட்டு சம்மேளனங்களுக்கு நிதி உதவி அளிக்கும் திட்டம்சர்வதேச அளவில் பதக்கம் பெறும் வீரர்கள் மற்றும் பயிற்சியாளர்களுக்கு பணப்பரிசு வழங்குதல்தேசிய அளவில் விளையாட்டு விருதுகள் அளித்தல் மெச்சத்தகுந்த விளையாட்டு வீரர்களுக்கு ஒய்வூதியம் வழங்குதல்விளையாட்டு வீரர்களுக்கான நல்வாழ்வளிக்கும்பண்டிட் தீனதயாள்உபாத்யாய் திட்டம்தேசிய விளையாட்டு மேம்பாட்டுநிதியம் அமைத்தல்இந்திய விளையாட்டு மேம்பாட்டுஆணையங்கள் மூலமாக விளையாட்டுப் பயிற்சி மையங்களைநடத்துவது போன்ற திட்டங்கள் அவற்றில் முக்கியமானவை ஆகும்.

மேற்கண்ட ஒவ்வொரு திட்டத்தின் முழு விபரம் யாரெல்லாம்அவற்றைப் பெறத்தகுதியானவர்கள்அவற்றை எப்படிப் பெறுவது போன்ற விபரங்கள் எல்லாம் ஒன்றியவிளையாட்டுத்துறைஅமைச்சகத்தின்அதிகாரப்பூர்வஇணையதளப் பக்கத்தில் விபரமாக சொல்லப்பட்டிருக்கிறது.

இவ்வாறு அமைச்சர் மன்சுக்மாண்டவியா பதிலளித்தார்.

### தமிழ்நாட்டில் முதல்வர் மு.க.ஸ்டாலின் – மக்கள் அமைதியாகவும்,சுதந்திரமாகவும்

# வழிபாட்டு முறைகளை பின்பற்ற பல்வேறு திட்டங்களை வகுத்துள்ளார்!

## மக்களவையில் மரு.ராணி ஸ்ரீ குமார் பேச்சு!

புதுடெல்லி, டிச.15-

நாடாளுமன்ற மக்களவையில் மருத்துவர் ராணி ஸ்ரீ குமார் பேசியதாவது:-



எங்களுடைய திராவிட மாடல் முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற நான்கரை ஆண்டு காலத்தில் இந்த சமய அறநிலைத் துறைக்கு பல்வேறு திட்டங்களை வகுத்துள்ளார்கள். இன்று வரை 3,935 க்கும் மேற்பட்ட திருக்கோயில்களில் குடமுழுக்கு நடத்தப்பட்டுள்ளது.

திருக்கோவிலுக்கு சொந்தமான 8024 ஏக்கர் நிலங்கள் ஆக்கிரமிப்பில் இருந்து மீட்கப்பட்டுள்ளன. பழமையான 352 திருக்கோயில்களின் மேம்பாட்டு பணிக்காக சுமார் 560 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தொன்மையான 76 திருக்கோயில்களில் குடமுழுக்கு நிறைவு பெற்றுள்ளது.

இந்த ஆட்சியின் குறிப்பிடத்தக்க சாதனையாக 150 ஆண்டுகளாக நடத்தப்படாமல் இருந்த தேர் திருவிழாக்கள் நடத்தப்பட்டுள்ளன. திருக்கோயில் அன்னதான திட்டத்திற்காக ஆண்டுதோறும் கிட்டதட்ட 120 கோடி ஒதுக்கப்பட்டு சுமார் 3 கோடி 65 லட்சம் பக்தர்கள் இத்திட்டத்தால் பயன்படுத்தப்பட்டுள்ளன.

பேரவை தலைவர் அவர்களே எங்களுடைய தமிழ் நாட்டில் மக்கள் அமைதியாகவும் சுதந்திரமாகவும் தங்கள் வழிபாட்டு முறைகளை பின்பற்றுவதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பல்வேறு திட்டங்களை வகுத்துள்ளார்கள். அதன்படி தான் இன்றைக்கும் நடந்து கொண்டிருக்கிறது.

மேலும் தமிழ் கடவுள் ஆன முருகனுக்கு எவ்வாறு எல்லாம் வழிபாடு செய்ய வேண்டும் என்ற வழிபாட்டு முறைகளை தமிழ் நாட்டு மக்களாகிய எங்களுக்கு யாரும் கற்றுத் தர வேண்டிய அவசியம் இல்லை என்று கருதுகிறேன். தமிழ்நாட்டில் அனைத்தும் தரப்பு மக்களும் ஒற்றுமையுடன்,இணக்கமாக இருந்து கொண்டிருக்கிறார்கள்.

இந்த அமைதி யான சூழ்நிலையில் சில மதவாத சக்திகள் மதத்தின் பெயரால் பொய்யான தகவல்களை பரப்பி மக்களை பிரித்து அமைதி பூங்காவாக விளங்கிக் கொண்டிருக்கிற எங்கள் தமிழ்நாட்டில் கலவர பூமியாக மாற்ற முயற்சித்துக் கொண்டிருக்கிறார்கள்.அதை தமிழ் நாட்டு மக்கள் என்றைக்கும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்.

மதத்தின் பெயரால் மக்களை பிரிக்கும் மதவாத சக்திகளை என்றைக்கும் தமிழ் நாட்டில் நாங்கள் நுழைய விட மாட்டோம்.தமிழ் நாட்டில் மதசார்பற்ற கட்டமைப்பை எங்கள் முதலமைச்சர் அவர்கள் சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். இதையெல்லாம் மற்ற மாநிலங்கள் பின்பற்றுமா?

பேரவை தலைவர் அவர்களே திருப்பரங்குன்றத்தில் முருகர் சிரித்தால் திருத்தணியில் மட்டுமல்ல,இந்த டெல்லியிலும் எதிரொலிக்கும்,என்பதை நாங்கள் ஆணித்தனமாக கூறிக் கொள்கிறோம்.மதவாத சக்திகளுக்கு எதிராக தமிழ்நாடு போராடும். தமிழ்நாடு வெல்லும் நன்றி.


இவ்வாறு தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் மரு.ராணி ஸ்ரீகுமார் மக்களவையில் பேசியுள்ளார்.



பண்ருட்டி சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட பண்ருட்டி நகரத்தில் என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி தமிழ்நாடு தலைகுனியாது நிகழ்வு, பண்ருட்டி நகர மன்ற தலைவர், நகர கழக செயலாளர் க.இராஜேந்திரன் தலைமையில் நடைபெற்றது. இதில் ஆர்.ராஜா, ஆர்.கே.ராமலிங்கம், கௌரி அன்பழகன், சண்முகவள்ளி பழனி. சோழன், கலைவாணி மதியழகன், பானு கோபன், ராஜசேகர், இளைஞரணி சம்பத், தமிழ்ச்செல்வன்,நாராயணன், பார்த்திபன், பாலச்சந்தர் ,பிரபு, வினேத், மோகன், சண்முகம் , அருண் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

# கெஞ்சுதலும் அஞ்சுதலும் அறியா முதல்வர்!

வி.பி. கலைராஜன்
கழக இலக்கிய அணிச் செயலாளர்





திறன்மிகு ஆட்சி நடத்தி மாநில உரிமைகளை மீட்டெடுக்க தினம்தினம் ஒன்றிய அரசிடமும் அவர்களது ஆளுநர் ஆர்.என். ரவியிடமும் போராடி கொண்டே நல்லாட்சி என்பதோடு கூடுதலாக இனமானம் காக்கும் ஆட்சியை நடத்தி வரும் முதல்வர் கழகத் தலைவர் அவர்கள் 2026 தேர்தலைப் பார்த்து பயப்படுகிறார் என்று எடப்பாடி பழனிச்சாமி, அன்புமணிராமதாஸ், நயினார் நாகேந்திரன் போன்றோர் பேசி வருகின்றனர்.

இந்திராகாந்தியாரின் மிசா அடக்குமுறையையும், சிறை அதிகாரி வித்யாசாகரின் வேகமான சதிச் செயல்களையும் மேலும் பல கைதுகளையும் எதிர் கொண்டு இழைக்கப்பட்ட இன்னல்களை தமிழ்நாட்டின் மக்களைக் காத்திட கிடைத்தப் பட்டயங்களாக கருதி அரசியலில் பவனி வரும் தி.மு.க தலைவரைப் பார்த்து சில்லுண்டிகள் சீண்டிப் பார்த்துள்ளனர். அந்த வித்யாசாகருக்குத்தான் பதவி உயர்வு தந்து மகிழ்ந்தார் எம்.ஜி.ஆர் என்பது தனிக்கதை.

வாக்காளர் சிறப்பு சீர்திருத்தப் பணி ஏன் தேவையில்லை என்று தலைவர் முதல்வர் மிகவும் தெளிவாக விளக்கமாக மக்களுக்கு அறிக்கையின் மூலம் கூறிவிட்டார். இது தொடருமானால் பீகாரில் 65 லட்சம் வாக்காளர்கள் பெயர் நீக்கப்பட்டதைப் போல் அதிலும் குறிப்பாக சிறுபான்மையினர், பெண்கள், எதிர்க்கட்சியினர் குறிவைக்கப்படுவர் என்றும் குறிப்பிட்டுள்ளார். பீகாரில் 36 சதவீதம் இஸ்லாமியர்கள் வாக்குகள் பறிக்கப்பட்டுள்ளது. தேர்தலும் முடிந்துவிட்டது. தேர்தல் ஆணையம் நினைத்ததை சாதித்து விட்டது.

இப்படி தமிழ்நாட்டில் ஒரு வாக்காளரும் பாதிக்கப்படக் கூடாது என்று தான் முதல்வர் நீதிமன்றத்தை நாடக் கூறினார். உடனே அ.தி.மு.கவோ வாக்காளர் திருத்தப் பட்டியல் நடக்க வேண்டும் என்று உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளனர். அ.தி.மு.க. என்று அடிமை தி.மு.க ஆனதோ அன்றே அதற்கு கட்டளை டெல்லியிலிருந்து வருகிறது.

கொடுக்கப்படும் விண்ணப்பத்தைப் படித்தவர்களாலேயே புரிந்து கொள்வது கடினமாக இருக்கிறது. பாமர மக்கள் பாதிக்கப்படுவார்களே என்று முதல்வர் வருத்தத்துடன் கூறியுள்ளார். உடனே தி.மு.கவினர் வாக்கு பறிபோய்விடுமென்று முதல்வர் பயப்படுகிறார் என்கிறார்கள். அப்படியானால் தி.மு.க வாக்குகளை குறிப்பிட்டு நீக்க திட்டமிட்டுள்ளனர் என்பது நன்றாக விளங்குகிறது.

பாமர கிராம மக்களிடம் புகைப்படம் உடனே கேட்டால் எப்படி அவர்களால் கொடுக்க முடியும்? பொங்கல், கிறிஸ்துமஸ், புதுவருடம், மழைக்காலம் என்று பல வருகிறது பகலில் வேலைக்கு செல்பவர்கள் சென்றால் யாரிடம் மனு கொடுப்பார்கள்? அப்படி ஒரு வாக்காளர் பெயர் நீக்கப்பட்டால் அவரது குடியுரிமை என்னவாகும்?

1993 ஆம் ஆண்டு ஒரு வழக்கில் உச்ச நீதிமன்றம் குடியுரிமையைத் தீர்மானிக்கும் பணி தேர்தல் ஆணையத்துடையது அல்ல என்று கூறியுள்ளது. அப்படி இருந்தும் அசாமில் பலர் குடியுரிமையற்றவர்களாக சர்வாதிகாரத்தோடு விரட்டப்பட்டு வருகின்றனர். இப்படி ஒரு நிலை வந்தால் தமிழர்கள் கதி என்ன ஆகும்? தேர்தல் ஆணையமோ உச்சநீதிமன்றத்தில் தற்போது குடியுரிமையை நிரூபிப்பது வாக்காளர் கடமை என்றும் குடியுரிமைக்கான நிரூபனத்தை கோரும் உரிமை தேர்தல் கமிஷனுக்கு உண்டு என்று வாதிட்டது.

குறிக்கிட்ட நீதியரசர் துலியா குடியுரிமையைப் பரிசோதிக்கும் பணி உங்களுடையதா என எச்சரிக்கை செய்தார். இது ஒருபுறமிருக்க கிட்டதட்ட 1 கோடி வடமாநிலத்தவர் தமிழ்நாட்டில் பணிபுரிகின்றனர். திருப்பூரில் மட்டும் 3 லட்சத்துக்கும் மேற்பட்டோர் உள்ளனர். டெல்டா பகுதியில் நடவு நடுகிறார்கள், உழுகிறார்கள், ஏன் மாடு கூட மேய்கிறார்கள். வாகன உரிமை இருந்தாலே போதும் வாக்குரிமைப் பெற்று விடுவர்.

30 ஆண்டுகளுக்கு முன்பு இறந்தவர்கள் பெயர் பல முறை எழுதிக் கொடுத்தும் தேர்தல் கமிஷன் இன்றுவரை நீக்கவில்லை. அப்படியானால் வடமாநில தொழிலாளர்கள் பெயரை நீக்கிட எழுதிக் கொடுத்தால் உடனே எப்படி நீக்குவார்கள்? வடமாநிலத்தவர்களுக்கு தெரிந்தது பா.ஜ.க தான். இங்கு தான் மோடி மஸ்தான் அமித்ஷா வேலை ஆரம்பிக்கிறது. தமிழர்கள் வாக்குகளை நீக்கிவிட்டு அவர்கள் வாக்குகளைச் சேர்த்து விட்டால் வாதத்திற்கு வைத்துக் கொள்வோம் ஒரு 10 லட்சம் பேரை பெயருக்கு நீக்கிவிட்டு குறைந்தபட்சம் 90 லட்சத்தில் 50 லட்சம் பேர் வடமாநிலத்தவர் வாக்களித்தால் நிலை என்ன ஆகும்?

இதற்குத் தான் முதல்வர் இவ்வளவு அவசர சிறப்பு திருத்தம் தேவையில்லை என்கிறார்? தமிழர்களே புரிந்து கொள்ளுங்கள். நீங்கள் நாடற்றவர் ஆக்கப்படப் போகிறீர்கள். எச்சரிக்கையுடன் இருங்கள். எத்தனை லட்சம் பேரை அவர்களால் நீக்க முடியும்? பார்த்து விடலாம்.

அன்புமணி முதல்வர் நிர்வாகத்திற்கு லாயக்கற்றவராம் என கூறியுள்ளார். உங்களை டெல்லியில் ஒன்றிய அமைச்சர் ஆக்கியவரே கலைஞர் அவர்கள் தான். பரவாயில்லை. உங்களை அமைச்சர் ஆக்கியதே நான் செய்த முதல் தவறு. கட்சிக்கு தலைவர் ஆக்கியதே நான் செய்த இரண்டாவது தவறு. அரசியலுக்கு லாயக்கற்றவர் அன்புமணி என்று இப்படியெல்லாம் உங்களைச் சொன்னது யார்? உங்கள் தந்தை மருத்துவர் ராமதாஸ் தான். நாங்கள் இல்லை. தேர்தல் வாக்குறுதிகளில் 66த் தான் நிறைவேற்றியுள்ளோமாம். அவை எவை எவையென்று கூறுவாரா? இந்த அதிபுத்திசாலி ஒன்றிய அமைச்சராக இருந்தபோது செய்த பலகோடி ஊழலுக்கான வழக்கு நடைபெறுகிறது. இவர் தான் நிர்வாகத் திறன் பற்றிப் பேசியுள்ளார். தந்தையை துன்பத்திற்கு ஆளாக்கி விட்டு அவரோடு இருப்பவர்களை ரவுடிகளை வைத்து தாக்குகிறார்.

எடப்பாடி பழனிச்சாமி முதலில் எதை சொன்னாலும் ஆதாரத்துடன் கூற வேண்டும். 30,000 கோடி ஊழலாம்? எதில் என்று கூறுவாரா? நகராட்சியில் 888 கோடி ஊழல் என்கிறார். இதற்கும் ஏதாவது ஒரு ஆதாரம் உள்ளதா? உங்கள் மகன், மாப்பிள்ளை அரசியலில் தலையீடு இல்லாமலா செங்கோட்டையன் கூறுவார்? இளைஞர்களுக்கு வேலையே வழங்கப்படவில்லை என்றார். இப்போது 50,000 பேருக்குத் தான் வேலை வழங்கியுள்ளனர் என்று அவரே கூறுகிறார். இந்த பித்தலாட்டவாதிகளுக்கெல்லாம் முதல்வரா பதில் தர வேண்டும்!

நேற்று முளைத்தக் காளான் ஒன்று தி.மு.கவிற்கும் அவர்களுக்கும் தான் போட்டி என்கிறது. எப்படியோ எல்லா கட்சிகளும் தி.மு.கவிற்கும் அவர்களுக்கும் தான் போட்டி என்கிறார்கள். வில்லன்கள் வேண்டுமானால் வேறுபடலாம் கதாநாயகன் என்னவோ தி.மு.க தான். ஆதவ் அர்ஜக்ஷினா என்பவர் 1952 தேர்தலில் தி.மு.க என்கிறார். தி.மு.க 1952ல் தேர்தலிலேயே நிற்கவில்லை. முதல்வர் ஓடி ஒளிந்தாராம். இவர் தான் கூட ஓடினாரா? தந்தைக்கு கட்டுப்பட்ட பாசமிக்க தலைவனா ஓடினார்! சின்னப் பையன்கள் விவரம் தெரியாமல் பேசி விட்டார்கள் என்று எங்கள் முதல்வர் பெருந்தன்மையாய் விட்டுவிட்டார். அதையே நாமும் செய்வோம்.

108 நாட்களில் தி.மு.கவை விரட்டப் போகிறோம் என்கிறார் எடப்பாடி. தி.மு.க என்ன கொசுவா நீங்கள் விரட்டினால் ஓடுவதற்கு! அ.தி.மு.கவை யாரும் அசைக்க முடியாதாம்! ஆட்டுவதற்கும், அசைப்பதற்கும் அங்கு என்ன இருக்கிறது? அதுவே இலையுதிர் கால மரம் போல் இலை உதிர்ந்துப் போய் நிற்கிறது. எதற்கு இந்த சவாலெல்லாம்? அதையே நயினாரும் கூறியுள்ளார். முதலில் இருவரும் சேர்ந்து 20 சீட்டுகள் வெற்றிபெற முடியுமா என்று பாருங்கள்.

வால்டேரையும், ரூசோவையும், மார்க்ஸையும், ஏங்கெல்ஸையும், சாக்ரடீஸையும், பிளாட்டோவையும், தந்தை பெரியாரையும், அறிஞர் அண்ணாவையும், அண்ணல் அம்பேத்கரையும், ஆபிரகாம்லிங்கனையும் முத்தமிழறிஞர் கலைஞரையும், பேராசிரியரையும், திராவிடர் கழகத் தலைவர் வீரமணியையும் அவர்களது கருத்துக்களையும் படித்து வளர்ந்த இயக்கம் திராவிட இயக்கம்.

இவர்களெல்லாம் யார் என்று உங்களுக்கு தெரிகிறதா? இன்னும் பலர் இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களை படித்து அறிந்த எங்களிடம் உங்கள் பம்மாத்து அரசியல் வேண்டாமா! அது என்னாளும் எடுபடாது.

ஒன்றிய அமைச்சர் முருகன் தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு கெட்டுவிட்டது என்று சென்னை வரும் போதெல்லாம் பேசுகிறார். அவருக்கு வேறு விஷயமே தெரியாது போலும். ஒன்றிய பா.ஜ.க ஆட்சியில் இந்தியாவில் சட்டம் ஒழுங்கு என்ன லட்சணத்தில் உள்ளது? பாராளுமன்றக் கட்டிடத்திற்கு மிக அருகில் கார் வெடிகுண்டு வெடித்து பதிமூன்று பேர் உயிரிழந்துள்ளனர் பலர் காயமடைந்துள்ளனர். பா.ஜ.க ஆளும் ஹரியானாவில் 3000 கிலோ வெடி மருந்து சிக்கியுள்ளது. இதுதான் முருகனே உங்கள் பாதுகாப்பு லட்சணமா? அதுவும் அமோனியம் நைட்ரைட் மருந்து.

பஹல்காம் தாக்குதலுக்கு பதிலடி தான் இந்த குண்டு வெடிப்பு என்கின்றனர். உங்கள் ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கை லட்சணத்தை இந்த கார் குண்டு வெடிப்பு மூலம் மக்கள் அறிந்து விட்டனர். இதற்கு ராஜ்நாத் சிங் என்ன பதில் தரப் போகிறார்? அதன் பிறகு காவல் நிலையத்தில் வெடிகுண்டு பரிசோதித்தப் போது வெடித்து 9 பேர் உயிரிழந்துள்ளனர் 32 பேர் படுகாயம் அடைந்துள்ளனர்.

பீகாரில் இந்தியா கூட்டணியின் தோல்விக்கு காரணம் லட்சக்கணக்கான வாக்குகளை திட்டமிட்டு நீக்கிவிட்டனர். வாக்குபதிவுக்கு முதல்நாள் நான்கு சிறப்பு ரயில்களில் வாக்காளர்களை அழைத்து வந்துள்ளனர் என்று மூத்த வழக்கறிஞர் கபில் சிபல் கூறியுள்ளார். வந்தவர்கள் யார்? இரயில்வேத் துறை பா.ஜ.கவின் ஒரு பிரிவா?

பா.ஜ.கவினர் பழங்குடியினருக்கு ஒன்றிய அரசு வழங்கும் நிதியை மாநில அரசு அவர்களுக்கு சேர்ப்பதில்லையாம். யார் போய் பா.ஜ.கவின் நாராயணன் திருப்பதியிடம் கூறினர். எந்த ஒரு பழங்குடியினராவது தி.மு.க அரசு மீது குற்றம் சுமத்தினரா? கூறுவாரா? இவர்களின் பிரதமர் மோடி மணிப்பூரில் குக்கி பழங்குடியின மக்கள் கொல்லப்பட்ட போதும், லட்சக்கணக்கில் அண்டை மாநிலங்களுக்கு அகதிகளாக சென்ற போதும், பழங்குடிப் பெண்கள் பாலியல் கொடுமைக்கு ஆளானபோதும், பழங்குடியினர் கிறிஸ்துவ கோயில்கள் நூற்றுக்கணக்கில் இடித்துத் தரை மட்டமாக்கப்பட்ட போதும் உடனே போய் மோடி தடுத்து நிறுத்தி பழங்குடியினரை பாதுகாத்தாரா?

கேட்டால் பழங்குடியினத்தைச் சேர்ந்த முர்முவை குடியரசுத் தலைவராக ஆக்கினோம் என்பர். அந்த இனம் என்பதற்காகத் தானே அவரை புதிய நாடாளுமன்றக் கட்டடத் திறப்பு விழாவிற்கு அழைக்கவில்லை. ராமர் கோயில் திறப்பு விழா மற்றும் ஆராதனைக்கு அழைக்கவில்லை. அதனால் தானே பா.ஜ.க ஆளும் ஒடிசாவில் உள்ள பூரி ஜெகன்நாதர் கோயிலுக்குள் அவரை அனுமதிக்கவில்லை. ஆனால் அதே குடியரசுத் தலைவர் தமிழ்நாடு வந்த போது ஸ்ரீரங்கம் கோயிலுக்கு சிறப்பு மரியாதையுடன் சென்று வந்தார். மணிப்பூர் சென்று பழங்குடி மக்களை பாதுகாக்காத பிரதமர் 893 நாட்கள் கழித்துத் தான் சென்றார். இது தான் இவர்கள் பழங்குடியினரை பாதுகாக்கும் லட்சணம்.

தூய்மை பணியாளர்களுக்கு வசித்திட வீடு 1000 பேருக்கு, வார்டுக்கு ஒரு ஓய்வறை, 31373 தூய்மை பணியாளர்களுக்கு மூன்று வேளை உணவு என முதல்வர் வழங்குவதை அன்புமணி கேலி செய்துள்ளார்.

“இருக்கும் இடம் தேடி என்பசிக்கே அன்னம்

உருக்கமுடன் கொண்டுவந்தால் உண்பேன்” என பட்டினத்தார் பாடியதை அவருக்கு நினைவூட்டி முதல்வர் வழங்கும் அன்னத்தை உலகம் போற்றுகிறது. வாழ்த்துகிறது. அன்புமணி வாழ்த்த மாட்டார் வசைப்படாமல் இனி மேல் இருப்பாரா?